# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 2 பிப்ரவரி 2024 தனிபிரதி – ரூ. 20/– ஆண்டு சந்தா– ரூ. 200/– | Vol : 10 Issue No : 2 February 2024 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-

**ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்**
**அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி,**
**உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்.**

ஆபகூக் 3:19



* மனவளர்ச்சி குறைபாடு நீங்கியது

* பிறவியிலேயே நடக்க முடியாத மகள் நடந்தாள்

* நுரையீரலில் உள்ள பிரச்சனை மாறியது





நான் பிறந்தப்பொழுது மனவளர்ச்சி குன்றிய குழந்தையாகவும், இரு கால்களும் சீரான நிலையில் இல்லாமல் நெட்டையும், குட்டையுமாக, விரல்கள் அனைத்தும் மடங்கிய நிலையிலும் பிறந்துள்ளேன். மருத்துவர்கள் எனக்கிருந்த மனவளர்ச்சி குறைபாட்டை என் பெற்றோரிடம் சொல்லாமல் மறைத்து விட்டார்கள்.

நான் 9 மாத குழந்தையாக இருந்தப்பொழுது என் அம்மா திருச்சி மதுரம் ஹாலில் நடைபெற்ற கூட்டத்திற்கு என்னை தூக்கிக் கொண்டு வந்து Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் என்னை காண்பித்து என்னுடைய கால்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டு கொண்டார்கள்.

**சகோதரர் அவர்கள் என்னுடைய கால்களுக்காகவும், மனவளர்ச்சி குறைபாடு நீங்கவும் ஜெபித்துவிட்டு தீர்க்கதரிசனமாக, மகளுக்கு கர்த்தர் நல்ல வளர்ச்சியை தருவார். மான் கால்களைப் போல மாற்றுவார் என சொல்லி அனுப்பினார்கள். கர்த்தர் சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக எனக்கு இரங்கினார்.**

**நான் வளர வளர என் காலில் உள்ள குறைபாடு நீங்கியது. மடங்கிய விரல்கள் நேராயின. நன்றாக நடக்க ஆரம்பித்தேன். பள்ளியில் படிக்கின்ற நாட்களில் ஓட்டப்பந்தயத்தில் நான் முதலாவதாக வருவதற்கும் கர்த்தர் உதவி செய்தார்.**

**இப்பொழுது நான் நன்றாக நடப்பதும் தெளிந்த புத்தியுள்ள மகளாய் இருப்பதும் தேவன் அன்பரின் ஊழியத்தின் மூலம் எனக்கு செய்த மிகப்பெரிய அற்புதம்.**

கடந்த 2023-ம் வருடம் என்னுடைய நுரையீரலின் அடிப்பகுதி சுருங்கி விட்டது என மருத்துவர்கள் சொன்னார்கள். அப்பொழுது திருச்சி தில்லைநகரில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்தேன். Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் ஸ்கேன் எடுத்து பார்த்தபொழுது எந்த பிரச்சனையும் இல்லை என மருத்துவர்கள் கூறினார்கள். இப்பொழுது நன்றாக சுவாசிக்கிறேன். என்னுடைய நுரையீரல் 100 சதவீதம் நன்றாக உள்ளது. தேவனுக்கே மகிமை!

Sis. கிறிஸ்டினா தெபோரா
திருச்சி.

# அன்பரின் ஊழியம்



Dr. ஜேன் ஜாஷ்வா

## ஆசிரியர் உரை...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இந்த புதிய வருடம் துவங்கி இம்மட்டும் நம்மை பாது காத்து வருகிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம். பெலவீனங்கள் மத்தியில் நம்மை பெலப்படுத்துகிற கர்த்தரை துதிப்போம்.

இந்த மாதத்திலும் உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தேர்வுக்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பார்கள். தேர்வு எழுதுகிற பிள்ளைகளுக்கு கர்த்தர் நல்ல சுகத்தையும், விசேஷித்த ஞானத்தையும் கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கிறேன். பிள்ளைகள் தேர்வு எழுதும் இந்த நேரங்களில் குடும்பங்களில் சமாதானம், சந்தோஷம் நிலவும்படியாகவும் ஜெபிக்கிறேன். **ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். (ஏசாயா 11:2) குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும், ஜெயமோ கர்த்தரால் வரும். (நீதி.21:31)**

ஜனவரி மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

பிப்ரவரி மாதம் கரிவலம்வந்தநல்லூர், திருநெல்வேலி, நாகர்கோவில், குண்டூர், விஜயவாடா மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் ஊர்களில் நடைபெறுகிற கூட்டத்திற்கு தவறாமல் வாருங்கள். பங்காளராகிய உங்களுக்காக அந்த நாட்களில் நேரில் ஜெபிக்கிறோம். **அன்பரின் ஆறுதல் டி.வி. ஊழியத்திற்கும் உங்களால் முடிந்தவரை ஸ்பான்சர் செய்யுங்கள்.**

கடந்த வருடம் Ministry of Jesus You tube சேனலில் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் பாடல்கள் வெளிவர கர்த்தர் உதவி செய்தார். அவை அனைத்தையும் தவறாமல் கண்டு களியுங்கள்.

**தினந்தோறும் அதிகாலை 5.00 மணிக்கு அனுதின அற்புதம் என்ற நிகழ்ச்சியானது Ministry of Jesus You tube சேனலில் வெளிவருகிறது. 5 நிமிடத்தில் அற்புதமான வாக்குத்தத்தச் செய்தியை கூறி உங்களுக்காக ஜெபிப்போம். தவறாமல் இந்த நிகழ்ச்சியை பாருங்கள்.**

எங்கள் அப்பாவின் நல்ல ஆரோக்கியத்திற்காக, நுரையீரல் பெலப்பட, அடிக்கடி எவ்வித பெலவீனமும் இனி வராதபடி கர்த்தர் பாதுகாக்க தொடர்ந்து ஜெபியுங்கள்.

**இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்**

**ஏசாயா 26:1 , யோபு 5:9-10**

**லூக்கா 24:49 , ரோமர் 8:39**

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627
Telugu & Hindi : +91 99445 36343, Malayalam: +91 94889 32937, kannada: +91 90031 17205
e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in
முகவரி: அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி -18
Address: Ministry of Jesus Prayer Centre, 10th Cross Street West Extension, Thillainagar, Trichy- 620018

# பிப்ரவரி மாதத்திற்கான

## தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

1 கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார். (சங்.29:11)

2 அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். (1சாமு.2:8)

3 அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல், அவர்களை... உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார்.(யோபு36:7)

4 கர்த்தர் என் கன்மலையும், ...என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார். (சங்.18:2)

5 கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன். (நெகே.8:10)

6 உம்முடைய நீதியால் உயர்ந்திருப்பார்கள். (சங்.89:16)

7 எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்குகிறார். (சங்.107:41)

8 கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான். (நீதி.29:25)

9 உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். (சங்.84:5)

10 ...என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர். (சங்.3:3)

11 பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன். (ஏசா.58:14)

12 என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர். (சங்.138:3)

13 என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது. (1 சாமு.2:1)

14 தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர். (சங்.8:2)

# பிப்ரவரி மாதத்திற்கான
## தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

15 பூமியிலுள்ள உயர்ந்த ஸ்தானங்களின்மேல் அவனை ஏறிவரப்பண்ணினார். (உபாகமம் 32:13)

16 நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி, யாக்கோபின் தேவனைக்குறித்து ஆர்ப்பரியுங்கள். (சங்.81:1)

17 அவன் பெலன் குறையவுமில்லை. (உபா.34:7)

18 ...அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும். (ஏசா. 30:15)

19 ...என் தேவன் என் பெலனாயிருப்பார். (ஏசா.49:5)

20 ஆண்டவராகிய கர்த்தாவே, என் இரட்சிப்பின் பெலனே,...(சங்.140:7)

21 தாழ்ந்தவர்களை உயரத்தில் வைத்து, துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார். (யோபு 5:10)

22 ...தாம் ஏற்படுத்தின ராஜாவுக்குப் பெலன் அளித்து, தாம் அபிஷேகம் பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவார். (1சாமு.2:10)

23 ...அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது. (சங்.73:4)

24 ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது.(நீதி.24:10)

25 நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன். (சங்.89:27)

26 அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என் உயர் தலங்களில் என்னை நிறுத்துகிறார். (2சாமு.22:34)

27 கர்த்தர் அவர்களுடைய பெலன். (சங்.28:8)

28 என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. (பிலி.4:13)

29 என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். (சங்.91:14)

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay paytm PhonePe

இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்




| | | |
|---|---|---|
| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

## Cell no. 94888 45627, 80987 42638

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# உயரமான ஸ்தலங்களில்
## (HIGH PLACES)



தேவ செய்தி: Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற இனிதான நல்ல நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். இந்த புதிய வருடத்தின் இரண்டாம் மாதத்தில் பிரவேசிப்பதற்கு கிருபை செய்த தேவன் இந்த ஆண்டு முழுவதும் உங்களை தம் கண்மணியைப் போல பாதுகாத்து வழி நடத்துவாராக!

ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன், அவர் என் கால்களை மான் கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார். ஆபகூக் 3:19. இந்த வாக்குத்தத்தத்தின்படியே நம் ஆண்டவராகிய கர்த்தர் இந்த மாதத்திலே உங்களை ஆசீர்வதிப்பதற்கு அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் உங்களுடைய ஆசீர் வாதத்திற்காக சில குறிப்புகளை உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆண்டவருடைய வார்த்தைகள் நம்முடைய வாழ்க்கையில் எப்பொழுதும் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது. அது மட்டுமல்ல நிச்சயமாக உங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை, தாக்கத்தை ஒரு வித்தியாசத்தை கொண்டு வருவதாகவும் இருக்கிறது. ஆபகூக் 3:19-ன் அடிப்படையில் சிந்திக்கவும் தியானிக்கவும் உங்களை அழைக்கிறேன்.

### *உயரமான ஸ்தலங்களில் உங்களை நடக்கப் பண்ணுவார்.*

இந்த புதிய ஆண்டில் கர்த்தர் தாமே உங்களை உயர்ந்த ஒரு நிலைக்கு கொண்டு வந்து, உங்கள் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை கர்த்தர் ஏற்படுத்தப் போகிறார். தாழ்வான இடங்களில் இருக்கின்ற உங்களை கர்த்தர் கண்ணோக்கி, இந்த மாதத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் கொண்டு போய் வைக்கப் போகிறார். அது ஆவிக்குரிய உயர்ந்த இடமாக இருக்கலாம் அல்லது உங்கள் குடும்ப வாழ்க்கையில் அல்லது தொழிலில் ஒரு முன்னேற்றத்தை, வளர்ச்சியை கட்டளையிடலாம். (Both Physical & Spiritual) உயரமான இடத்தில் உங்களை நடக்கச் செய்வது என்பது ஒரு முன்னேற்றத்தின் (Progress) அடையாளம்.

ஆவிக்குரிய ஜீவியத்திலும் உங்களுக்கு Spiritual authority, Spiritual Leadership, Spiritual commanding-ஐ கர்த்தர் தரப்போகிறார். உலகப்பிரகாரமாக உங்களுக்கு என Power, Position, Responsibility-ஐ கொடுத்து ஆண்டவர் உயர்ந்த இடத்தில் வைக்கப்போகிறார்.

உங்களுடைய தொழில் நீங்கள் செய்துக்கொண்டிருக்கிற வேலை அல்லது குடும்பத்தின் காரியங்களில் ஆண்டவர் உங்களை உயர்த்துவதற்கு நினைத்துவிட்டால்

அதை ஒருவராலும் தடுக்க முடியாது. ஆனால் அந்த உயர்வை அடைவது எளிது அல்ல. மிகவும் கடினமான காரியம்.

சாதாரணமாக ஒரு கம்பெனியில் கொடுக்கிற target–ஐ அடைவதற்கு நிறைய தடைகள், எதிர்பாராத பிரச்சனைகள், ஒரு சில துன்பங்கள் மற்றும் சவால்களைகூட சந்திக்க நேரிடும். இவற்றை எல்லாம் கடந்துதான் அந்த target–ஐ வெற்றியாக முடிக்க முடியும்.

ஆவிக்குரிய மற்றும் உலக பிரகாரமாக வளர்ச்சி பெறமுடியாமல் தேவையில்லாத மன அழுத்தம், சோர்வுகள், சில துன்பங்கள், சில தடைகள் எல்லாம் வரும். ஆனால் அந்த தடைகளை தாண்டி சென்றால்தான் ஆவிக்குரிய உயர்வை, உலகப்பிரகாரமான உயர்வை அடைய முடியும். நமக்கு முன்பாக இருக்கிற இலக்கை மட்டுமே நோக்கி பார்க்க வேண்டும். **தடைகளை, சவால்களை பார்த்தால் இலக்கை அடைய முடியாது. இலக்கை மட்டுமே நோக்கிப்பார்த்து முன்னேறினால் அந்த தடைகள் அனைத்தும் தானாகவே உடைந்து விடும்.**

பிசாசு தேவையில்லாத சுகவீனங்களை, மனச்சோர்வை கொண்டு வருவான். அவன் யோபுவைக் குறித்து ஆண்டவரிடம் சவால் விட்டான். இவற்றையெல்லாம் உடைத்து சென்றால்தான் ஆவிக்குரிய நிலையில் உயர்ந்த நிலையை அடைய முடியும். **உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்வேன் என தாவீது சொல்கிறான். ஏனென்றால் ஆண்டவருடைய வல்லமை, கிருபை அவனுக்குள் இருந்தது.**

பூமியிலுள்ள உயர்ந்த ஸ்தானங்களின் மேல் அவனை ஏறிவரப்பண்ணினார், உபாகமம் 32:13—ல் உள்ளபடி கர்த்தர் பூமியிலுள்ள உயர்ந்த ஸ்தானத்திலே உங்களை ஏறிவரப்பண்ணுவார். உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கவே அவர் விரும்புகிறார். ஆனால் நாமாகவே சில நேரங்களில் கீழே போகிறோம்.

அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என் உயர் தலங்களில் என்னை நிறுத்துகிறார். 2சாமுவேல் 22:34–ல் இது ஒரு அரசன் பாடிய பாடல். இதே வசனம் சங்.18:33–ல் அப்படியே இருக்கிறது. உயரமான ஸ்தலங்களில் ஆண்டவர் உங்களை நடக்கப்பண்ணுவார். ஆகவே எதற்கும் சோர்ந்து போகாதீர்கள். உயரமான ஸ்தலங்களிலே நடக்கப்பண்ணுகிற தேவன் தாமே இந்த மாதத்திலே உங்களை உயர்த்தி நிலைநிறுத்துவார் என விசுவாசியுங்கள். அற்புதங்களை காண்பீர்கள்.

இந்த உயர்விடங்களுக்கு கொண்டுபோவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் முதலில் ஆவிக்குரிய ஜீவியத்தில் நீங்கள் உயர்ந்திருக்க தொடர்ந்து ஜெபித்து செயல்பட வேண்டும். அப்பொழுது உலகப்பிரகாரமான உயர்வை அடைவது எளிதாகும். ஒரு சிலர் ஆவிக்குரிய உயர்வை விட்டுவிட்டு உலகப்பிரகாரமாகவே கேட்டுக் கொண்டிருப்பார்கள். நீங்கள் முதலில் ஆவிக்குரிய உயர்வை தேடும்பொழுது, உலகப்பிரகாரமான உயர்வு தானாகவே வந்துவிடும்.

ஆவிக்குரிய மற்றும் உலக வாழ்வில் வளர உயரமான ஸ்தலங்களில் வருவதற்கான இரண்டு வழிமுறைகளை கர்த்தர் உங்களுக்கு வைத்திருக்கிறார். அவைகளை தொடர்ந்து பார்ப்போம்.

WEBSITE
*www.ministryofjesus.in*

# கர்த்தர் உங்கள் பெலனாய் இருப்பார்

ஆபகூக் 3:19–ல் ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன் என்று சொல்லும்பொழுது அது சாதாரண ஒரு வேலைகளையோ அல்லது ஒரு காரியத்தையோ செய்வதற்கான பெலன் அல்ல. அசாதாரணமான காரியங்களை, எவராலும் செய்ய முடியாத காரியங்களை செய்வதற்கான விசேஷித்த பெலனையே குறிக்கிறது.

கர்த்தர் உங்கள் பெலனாக, வல்லமையாக இருக்கும் பொழுது உங்கள் முன் யாரும் எதிர்த்து நிற்க முடியாது. ஆண்டவராகிய கர்த்தர் உங்கள் பெலனாக இருக்கும்பொழுது உங்களுக்கு முன் இருக்கிற சவால் எல்லாம் ஒன்றுமில்லாமல் தரைமட்டமாகிவிடும். **2சாமு.22:33 தேவன் எனக்கு பலத்த அரணானவர்.** ஆங்கிலத்தில் ஆண்டவர் எனக்கு பெலனாக இருக்கிறார் என எழுதப்பட்டுள்ளது.

ஆண்டவருடைய பெலன் இருக்கும்பொழுது என்ன கஷ்டங்கள் வந்தாலும் அது ஒன்றுமில்லாமல் நொறுங்கிப்போய்விடும்.

கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்? சங்கீதம் 27:1–ல் கர்த்தர் எனக்கு பெலனாயிருக்கிறார் என தாவீது உறுதியாக சொல்கிறான். அதே நேரத்தில் **கர்த்தரும் தமது ஜனத்திற்கு பெலன் கொடுக்கிறவராகவும் இருக்கிறார்.** சங்.29:11. நீங்கள் அவருடைய மகனாக மகளாக இருப்பீர்களானால் அவர் உங்களுக்கு பெலன் கொடுக்கிறவராகவே இருக்கிறார். இன்னொரு விளக்க உரையில் இதை தனிப்பட்ட வீரம் (Personal Bravery) என சொல்லப்பட்டிருக்கிறது. சிம்சோன் ஒரு சாதாரண கழுதையின் தாடை எலும்பைக் கொண்டு ஆயிரம்பேரைக் கொன்றான் என்றால் அந்த பெலன் எங்கிருந்து வந்தது? கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம்பேரைக் கொன்றேன் என்றான். நியாயாதிபதிகள்15:16.

சிங்கத்தை ஆட்டுக்குட்டியைப் போல கிழித்துப்போடக் கூடிய பெலன் தாவீதுக்கு எங்கிருந்து வந்தது. **அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம்பண்ண உன்னால் ஆகாது. நீ இளைஞன், அவனோ தன் சிறுவயது முதல் யுத்தவீரன் என்றான். தாவீது சவுலைப் பார்த்து: உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன். அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து,அதை அடித்துக் கொன்றுபோட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன். 1சாமு.17:33–36** கோலியாத்தைப் போல எவராலும் வெல்ல முடியாத ஒரு பெரிய இராணுவ கூட்டமே உங்களை எதிர்த்து வந்தாலும், கர்த்தர் தருகின்ற பெலன் உங்களோடு இருக்கும்பொழுது தாவீதைப்போல நீங்கள் ஜெயிக்க முடியும். அதிக ஞானம், பயங்கரமான ஆற்றல் உள்ளவர்களாக நீங்கள் இருந்தாலும் ஆண்டவருடைய பெலன் இருக்கும்பொழுது மட்டுமே அனைத்திலும் ஜெயம் பெற முடியும்.

உங்களைவிட அதிக ஞானம் படைத்தவர்களைக் கண்டு நீங்கள் பயப்பட தேவையில்லை. ஏனென்றால் கர்த்தருடைய பெலன் உங்களுக்குள் இருக்கும்பொழுது அவர்களைக் காட்டிலும் சிறந்த ஒன்றை நீங்கள் செய்ய முடியும்.

அன்றைக்கு எலிசாவின் வீட்டை சுற்றிலும் இராணுவமும், குதிரைகளும், இரதங்களும் குவிந்தது. (2இராஜா.6:15-19) ஆனால் அவனுக்குள்ளே இருந்த கர்த்தருடைய பெலனினால் சுற்றியிருந்தவர்களுக்கு ஒருவித கண்மயக்கம் ஏற்பட்டு செய்வது அறியாது திகைத்து நின்றனர். எலிசாதான் அவர்கள் கரங்களைப் பற்றி பிடித்து சமாரியா வரை அழைத்து சென்றான். இதுதான் கர்த்தருடைய பெலன். ஒரு வேளை உங்கள் வாழ்க்கையிலும் கூட இது வெல்லவே முடியாத, இது தாங்கவே முடியாத பாரம் என திகைத்து நிற்கிற பல்வேறு காரியங்களில் நீங்கள் வெற்றி பெற கர்த்தருடைய பெலன் தேவை.

தேவனுடைய பிள்ளைகளே, யோசித்துப் பாருங்கள். **உயர்ந்த இடத்தில் உங்களை நடத்த ஆண்டவர் ஒரு பெரிய திட்டத்தை உங்களுக்கு என வைத்திருக்கிறார். சின்ன பிரச்சனையைப் பார்த்து ஆண்டவரின் பெரிய திட்டத்தை இழந்து விடாதீர்கள். கர்த்தர் உங்கள் பெலனாய் இருப்பாரானால் நீங்கள் எளிதாக ஜெயிக்க முடியும்.** நிச்சயமாக உங்களால் அவைகளை மேற்கொள்ள முடியும், அவர் மேல் உள்ள நம்பிக்கையினால் சமாளிக்க முடியும், வெற்றி பெற்று உயர் ஸ்தலங்களில் நடக்க முடியும்.

## கர்த்தர் உங்கள் கால்களை மான்கால்களைப் போலாக்குவார்.

ஆண்டவர் தாம் உண்டாக்கிய ஒரு சிருஷ்டியைக் கொண்டு, அவருடைய சாயலாக படைக்கப்பட்ட நமக்கு ஒரு பாடத்தை கற்றுத்தருகிறார். **அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார். ஆபகூக் 3:19.** அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி என ஒரு விலங்குடன் ஒப்பிட்டு சொல்கிறார். உங்கள் கால் மானின் காலைபோல மாறாத பட்சத்தில் உங்களால் உயர்ந்த ஸ்தலத்திற்கு வரமுடியாது. ஆண்டவர் ஒரு விலங்கின் காலைக்கொண்டு நமக்கு நல்ல பாடத்தை கற்றுத்தருகிறார். ஏனென்றால் ஆண்டவருடைய ஒவ்வொரு படைப்புகளும் அதிசயமானவைகள். சில மொழிபெயர்ப்பில் மான் (deer) என்கிற வார்த்தையை Hinds feet என சொல்லப்பட்டு இருக்கிறது. இதன் அர்த்தமும் மானைத்தான் குறிக்கிறது.

வேதத்தின் அடிப்படையில் இரண்டு வசனங்களை பார்க்கலாம். நப்தலி விடுதலைபெற்ற பெண்மான் (**ஆதியாகமம் 49:21) அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி, என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.** (சங்.18:33 2சாமு.22:34)

Deer's feet என்பதும் Hind's feet என்பதும் ஒரே அர்த்தத்தில்தான் சொல்லப் பட்டிருக்கிறது. Hind's என்பது (Adult female red deer) ஒருவகையான முதிர்ச்சியுற்ற சிவப்பு பெண்மானைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. சுருக்கமாக இதை புரிந்துக்கொள்ள வேண்டுமானால் **மான்களின் கால்கள்** என எடுத்துக் கொள்ளலாம்.

Gazelle என்பது அழகான கவர்ச்சிகரமான ஒரு இனத்தை சேர்ந்த மான் ஆகும். இவ்வளவு அருமையான ஒரு ஜீவராசியைக் கொண்டு ஆண்டவர் நமக்கு ஒரு அருமையான பாடத்தை கற்பிக்கிறார்.

**மானுடைய கால்களில் காணப்படுகின்ற 5 குணாதிசயங்கள் மூலம் நீங்களும் உயர்ந்த இடங்களுக்கு செல்ல முடியும். அந்த ஐந்து குணாதிசயங்களை ஒன்றன்பின் ஒன்றாக சிந்திப்போம்.**

## 1.உறுதியான கால்களை உடையது

உறுதியான கால்களை உடைய மிருகங்களில் மான் தான் சிறந்தது, முதன்மையானது. மானுடைய கால்களில் ஒருவித கிரிப் இருக்கும். சுத்தமான பாறைகளில் நடக்கும்பொழுது எந்தவித சலனம் இல்லாமல் சரியாக நடக்கும். அவை மலைகளில் ஏறும்பொழுது சிறிய சறுக்கல்கூட இல்லாமல், சற்றும் தடுமாறாமல், கீழே விழாமல் அருமையாக நடக்கும். அதன் கால்கள் **Sturdy Footrests** ஆக இருக்கும். இது **Sure Footed Animal** என அழைக்கப்படுகிறது.

அன்பு பிள்ளைகளே, நீங்களும் **உயர்ந்த இடத்திற்கு போகனும் என நினைக்கலாம். அது நல்லது. நீங்கள் எடுத்து வைக்கிற முதல் படி அல்லது எடுக்கிற முதல் தீர்மானம் மிகவும் உறுதியானதாக இருக்க வேண்டும். அதில் எந்தவிதமான தடுமாற்றமும் இருக்க கூடாது.**

**உங்கள் வியாபாரத்தில் எடுக்கிற முதல் முயற்சி அல்லது புது வேலைக்கு செல்வதாக இருந்தாலும் நீங்கள் எடுத்து வைக்கிற முதல் அடி உறுதியானதாக இருக்க வேண்டும். உறுதியான தீர்மானம் எடுக்கும்போது உயர்ந்த இடத்திற்கு போக முடியும். இதுவா அதுவா என இரண்டு மனத்துடன் இருந்தால் உயர்ந்த இடத்திற்கு போக முடியாது.**

## 2. சரியாக கவனம் செலுத்துதல்

மானின் கால்கள் எப்பொழுதும் சரியான நிலையில் வைக்கும். தன்னுடைய முன்னங்கால்களை எங்கு வைக்கிறதோ அதே இடத்தில்தான் தன்னுடைய பின்னங் கால்களையும் அப்படியே இடம் மாறாமல் வைக்கிறது. உயர்ந்த இடத்திற்கு செல்வதற்கு கவனம் செலுத்துதல் மிக அவசியம். உங்களுடைய கவனம் சரியானதாக இருக்கனும். வலது இடது பக்கம் பார்த்து கவனத்தை விட்டுவிடக்கூடாது. எத்தனை கவன சிதறல்கள் தொந்தரவுகள் வந்தாலும் சரியான கவனம் உடையவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உயரமான ஸ்தலங்களுக்கு போக முடியும்.

## 3. சுறுசுறுப்புடன் செயல்படுதல்

**Deer are symbols of agility.** மான் கால்கள் எப்பொழுதும் துறுதுறு என இருக்கும். மான்கள் சுறுசுறுப்புக்கு ஓர் அடையாளம். சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். நீதி.6:6–ன்படி எறும்பினிடத்தில் போய் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமும் இருக்கிறது. அது ஒரு சின்ன உயிரி. சோம்பேறியாக இருந்தா உங்களால் மேலே போகமுடியாது. மான் கால் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருக்கும். மானின் கால்களை போல உங்கள் கால்கள் இருந்தால் நீங்களும் உயர்ந்த இடத்திற்கு போகமுடியும். இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையில் சோம்பல் காணப்படுகிறதா? என ஆராய்ந்து பாருங்கள். சோம்பல் தூங்கிவிழப்பண்ணும், அசதியானவன் பட்டினியாயிருப்பான். நீதி.19:15

ஞாயிற்று கிழமைகளில் ஆலயத்திற்கு வரும்பொழுது சுறுசுறுப்பாக வரனும். ஆண்டவர் உங்களுக்கு என பல திறமைகளையும், தாலந்துகளையும் கொடுத்திருக்கும் பொழுது நீங்களே உங்களை மட்டுப்படுத்த வேண்டாம். முடவன் மானைப்போல குதிப்பான் (ஏசாயா 35:6) என வேதம் சொல்கிறது.

## 4. துரிதமாய் செயல்படுதல்

மான் வேகமாக ஓடக்கூடிய விலங்கு (Fast runner Animal) என சொல்லலாம். சில விலங்குகளைப் பார்த்தால் அவை மெதுவாக செயல்படும். ஆனால் மான் ஏதாவது ஒரு விலங்கு தன்னை பிடிக்க வருகிறது என அறிந்தால் உடனே தன்னை காப்பாற்றிக்கொள்ள அதிவேகமாக ஓடக்கூடிய கால்களை பெற்று இருக்கிறது. இன்னொரு விலங்கு அதை பிடிப்பது கடினம். அந்த அளவிற்கு வேகமாக ஓடும். நாமும் உயர்ந்த இடத்திற்கு செல்ல வேண்டுமானால் மான்களின் கால்களைப்போல துரிதமாக செயல்படக்கூடிய வர்களாய் இருக்க வேண்டும்.

அன்றைய தினத்தின் வேலையை அன்றைய தினமே சரியாக முடிக்க கற்றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக ஒரு ஆசிரியர் பணியில் இருக்கிறவர்கள் அந்த பணியை திறம்பட செய்யும்பொழுதுதான் அடுத்து தலைமை ஆசிரியர் பதவிக்கு செல்ல முடியும். **மானைப்போல துரிதமாக செயல்படக் கூடியவர்கள்தான் உயர்ந்த நிலைக்கு வரமுடியும்.**

## 5. தைரியமாக முன்னேறுதல்

மானின் கால்கள் எவராலும் செல்லவே முடியாத நிலப்பரப்பில் கூட தைரியமாக முன்னேறிச் செல்லக்கூடிய தன்மையை பெற்று இருக்கிறது. மலைப்பகுதிகளில் உள்ள செங்குத்தான பாறைகளில் கூட மான்கள் தடுமாறாமல் ஏறிச் செல்லும். அது கொஞ்சம்கூட அடி பிசகாமல், பயம் இல்லாமல் தைரியமாக முன்னேறிச் செல்லும் கால்களை உடையது. மான்களின் வசிப்பிடமே உயர்ந்த மலைகள்தான். நீங்களும் இந்த மாதம் உயர்ந்த இடத்தில் இருப்பீர்கள்.

யாராலும் செய்ய முடியாத காரியங்களை கர்த்தர் உங்களைக் கொண்டு செய்வார். கர்த்தருடைய பெலன் உங்களை செய்ய வைக்கும். இதை ஆழமாக நல்ல பாடமாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மான் கால்களில் காணப்படும் இந்த ஐந்து குணாதிசயங்களை உங்கள் வாழ்வில் நீங்கள் கடைப்பிடிக்கும்பொழுது நிச்சயமாக கர்த்தர் உங்களையும் உயரமான ஸ்தலங்களில் நடக்கப் பண்ணுவார்.



சாதாரண ஒரு மானின் காலைக் கொண்டு கர்த்தர் அற்புதமாக சில காரியங்களை நமக்கு போதிக்கிறார்.

1. காலை வைத்தப்பிறகு யோசிக்காமல் உறுதியான தீர்மானம் எடுங்கள்.

2.எதை நோக்கி செல்கிறீர்களோ அதை நோக்கிய கவனத்தை விட்டு விடாதீர்கள். கவனம் ரொம்ப முக்கியம்.

3.ஆவிக்குரிய ஜீவியத்திலும், உலக வாழ்க்கையிலும் சோம்பல் இருக்கக்கூடாது. அனைத்திலும் சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும்.

4.வேகம் இருக்க வேண்டும். நாளைக்கு என எந்த காரியத்தையும் தள்ளிப்போடக்கூடாது.

**5.எவராலும் செய்ய முடியாத காரியத்தை எல்லாம் கர்த்தர் உங்களைக் கொண்டு எல்லாவற்றிற்கும் மேலாக செய்ய வைப்பார். கர்த்தரே உங்களுக்கு பெலனாக இருந்து உயரமான ஸ்தலங்களுக்கு கொண்டு செல்வார்.**

இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் என் அன்பு சகோதர சகோதரிகளே, இன்றே உங்கள் வாழ்க்கையை தேவனுக்கென்று முழுமையாக ஒப்புக்கொடுத்து, மான்களின் கால்களின் மூலம் கற்றுக்கொண்ட ஐந்து குணாதிசயங்களையும் உங்கள் வாழ்வில் கடைப்பிடியுங்கள். உங்களுக்கு தேவையான அனைத்து பெலனையும் கர்த்தரே உங்களுக்கு கொடுத்து நீங்கள் ஆவிக்குரிய வாழ்விலும், உலக வாழ்விலும் வளர்ச்சியடைந்து வெற்றி பெறச்செய்து உயரமான ஸ்தலங்களில் உங்களை நடக்கப்பண்ணி அங்கே வாசம் பண்ணும்படியும் செய்வார். இந்த ஆசீர்வாதங்களை இந்த மாதத்தில் நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு தேவன்தாமே உங்கள் ஒவ்வொரு வருக்கும் கிருபை செய்வாராக.

MALAYALAM WHATSAPP NO.
***+91 94889 32937***

TAMIL WHATSAPP NO.
***+91 95975 55066***



## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

### தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

இரவு 8.30 முதல் 9.00 வரை

### தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

புதன், வியாழன், வெள்ளி,

இரவு 7.00 முதல் 7.30 வரை

### மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

சனி

இரவு 7.30 முதல் 8.00 வரை

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

# We are Hiring!!!

## ACCOUNTANT

(B.com. / M.com. Graduates)
Skills Required : Tally ERP 9

*Apply to*
ministryofjesushr@gmail.com

# துதி அறிக்கை

## பெலவீனம் மாறியது!



திருமதி. எலிசபெத் பால்மாணிக்கம்
பாளையங்கோட்டை

எனக்கு கடந்த 6 மாதங்களாக நரம்பு மற்றும் எலும்பு பெலவீனத்தின் நிமித்தம் கையை அசைக்கவே முடியாது. கழுத்து பகுதியை திருப்ப முடியவில்லை. என் கையால் பல் துலக்க முடியாது, கையால் உணவை எடுத்து சாப்பிட முடியாது. என்னுடைய பத்து விரல்களும் வேலை செய்யவில்லை. இதனால் அதிக வேதனையடைந்தேன். இதற்காக பல சிகிச்சைகளை மேற்கொண்டேன். முன்னேற்றம் இல்லை. நான் அன்பரின் ஊழிய பங்காளர். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை நன்கு அறிவேன். **ஒரு நாள் தொலைபேசி வாயிலாக சகோதரர் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபித்து முடித்தவுடனே என் விரல்களை என்னால் நன்றாக மடக்க முடிந்தது. தற்பொழுது என் கையால் என்னுடைய எல்லா வேலைகளையும் செய்துக் கொண்டிருக்கினே். கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த சகோதரர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.**

## குழந்தை பாக்கியம் உண்டானது!



திரு. ஜான் டேவிட், கோயம்புத்தூர்.

எங்களுக்கு 2012-ம் ஆண்டு திருமணம் ஆனது. என் மனைவி கருத்தரித்து 3 முறை abortion ஆகிவிட்டது. அதன்பின் சில வருடங்களாகவே கருத்தரிக்கவே இல்லை.

திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் பங்காளர்களுக்கான தனி ஜெபம் நடைபெற்றது. அந்த ஜெபத்திற்கு நாங்கள் வந்திருந்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் குழந்தைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம். சகோதரர் ஜெபித்துவிட்டு தீர்க்கதரிசனமாக சொன்னார்கள், தாயின் சாயலில் ஒரு ஆண் குழந்தையும், தந்தையின் சாயலில் ஒரு பெண் குழந்தையையும் கர்த்தர் உங்களுக்கு தருவார் என சொல்லி அனுப்பினார்கள். **ஒரு சில நாட்களில் கர்த்தர் இரங்கினார். சகோதரர் சொன்னபடியே எங்களுக்கு கர்த்தர் இரண்டு குழந்தைகளை தந்து ஆசீர்வதித்து இருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

## 10 வருட நரம்பு பிரச்சனை மாறியது

எனக்கு கடந்த 10 வருடங்களாக காலில் வேதனையிருந்தது. அதற்காக நான்கு மருத்துவர்களை பார்த்து சிகிச்சை எடுத்தேன். இறுதியாக நரம்பில் தண்ணீர் இருக்கிறது. நரம்பு மருத்துவரைப் பார்த்து சிகிச்சை செய்து அந்த தண்ணீரை வெளியே எடுத்தால் கால் வேதனை நீங்கும் என சொன்னார்கள். கடந்த வருடம் அக்டோபர் மாதம் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து ஜெபித்து சென்றேன். **அதன்பின் 3 நாள் கழித்து நரம்பு வழியாக தண்ணீர் தானாக வெளியே வந்தது. என்னுடைய வேதனையும் நீங்கியது. 10 வருட வேதனையை அற்புதமாக நீக்கிய கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். அன்பரின் ஊழியத்திற்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.**



திருமதி. இஸபெல்லா மேரி
பாலக்காடு.

# வேலையில் தேவ கிருபை பெருகியது!



திரு. பால்.

நான் நடத்துனராக பணியாற்றிக் கொண்டிருந்தப்பொழுது பஸ்ஸில் பயணம் செய்த ஒரு நபர் படியிலிருந்து தவறி கீழே விழப்போனார். அவரை பிடிக்க நான் முயன்ற பொழுது நானும் அவரோடு சேர்ந்து கீழே விழுந்த வேகத்தில் என்னுடைய காது பகுதியில் பயங்கரமாக அடிபட்டது. அதனால் காதின் கேட்கும் திறன் குறைந்துவிட்டது. அந்த நேரத்தில் நான் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து என்னுடைய இக்கட்டான இந்த நிலையை சொல்லி எனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். **சகோதரர் ஜெபித்துவிட்டு கலங்காதீர்கள், நீங்கள் பணி ஓய்வு பெறும்வரை தொடர்ந்து நன்கு வேலை செய்ய கர்த்தர் உதவி செய்வார் என சொல்லி அனுப்பினார்கள். சகோதரர் சொன்னபடியே என்னுடைய 58-ம் வயது வரை எந்தவித பாதிப்பும் இன்றி நன்றாக பணிசெய்து ஓய்வு பெற கர்த்தர் தாமே மிகுந்த கிருபையுடன் எனக்கு இரங்கினார். தேவனுக்கே மகிமை!**

# படிப்பில் முதலிடம்



மாஸ்டர். ஜெரிமி இம்மானுவேல்
திருச்சி.

நான் திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு என் தாத்தா பாட்டியுடன் தவறாமல் வந்துக் கொண்டிருக்கிறேன். ஒரு முறை Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்கள் என்னிடம் உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள் என சொன்னார்கள். நான் நன்றாக படித்து முதல் ரேங்க் எடுக்க வேண்டும் என சொன்னேன். **அங்கிள் ஜெபித்துவிட்டு நீ முதல் ரேங்க் எடுப்பாய் என சொல்லி அனுப்பினார்கள். அங்கிள் சொன்னபடியே நான் கடந்த காலாண்டு தேர்விலும், 2nd midterm தேர்விலும், அரையாண்டு தேர்விலும் முதல் ரேங்க் எடுக்கும்படி கர்த்தர் எனக்கு உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**
**எனக்காக பாரத்துடன் ஜெபித்த அங்கிள் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவிக்கிறேன்.**





TELUGU WHATSAPP NO.
+91 91770 87860

# தீர்க்கதரிசியின் வார்த்தையை கர்த்தர் நிறைவேற்றினார்

திருமதி. ஜெஸி ஜெயகரன்
மதுரை.

என்னுடைய மாமனார், மாமியார், என் கணவர் மற்றும் கணவருடைய இரு சகோதரர்கள் அனைவரும் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்கள் குடும்பத்தினரை நன்கு அறிவார்கள். ஐயா, அம்மா இருவரும் மதுரை கூட்டத்திற்கு வரும் பொழுதெல்லாம் அவர்களுக்கு ஏற்ற வகையில் உணவு சமைத்து தருவோம்.

நான் M.Sc நர்சிங் படித்து இருக்கிறேன். இருப்பினும் அந்த துறையை விட்டு என் கணவர் செய்கிற வங்கி வேலை செய்வதற்காக அநேக வங்கி தேர்வுகளை எழுதினேன். ஐயா என்னை பார்க்கும் பொழுதெல்லாம், மகளே, நீ M.Sc நர்சிங் முடித்திருக்கிறாய். அந்த ஞானத்தை தள்ளி வைத்துவிடாதே, கர்த்தர் அதன் வழியாக உன்னை மிகவும் உயர்த்தி, அயல் நாட்டிற்கும் போகச் செய்வார் என கூறினார்கள். நான் சிரித்துக் கொண்டே தலையசைத்தேன். ஒரு சில நாட்களிலேயே எனக்கு நர்சிங் வேலை கிடைத்தது. அந்த வேலையை செய்துக்கொண்டிருந்த நாட்களில், சகோதரர் சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே லண்டனில் உள்ள புகழ்பெற்ற மருத்துவமனையில் நல்ல போஸ்டிங்கில் நர்ஸ் வேலையில் சேருவதற்கான விசா கிடைத்து இப்பொழுது அங்கு வேலை செய்து வருகிறேன். இந்த அற்புதத்தை என் நாவினால் விவரிக்க முடியாது. கர்த்தரை மனதார ஸ்தோத்தரித்து அன்பரின் ஊழியத்திற்கு என்னுடைய பொருத்தனை காணிக்கையை செலுத்துகிறேன்.

## கர்த்தர் சமாதானத்தை தந்தார்

கடந்த ஆறு வருடங்களாக திருச்சியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு வந்துக்கொண்டிருக்கிறேன். என் வாழ்வில் கர்த்தர் ஏராளமான அற்புதங்களை செய்திருக்கிறார். குறிப்பாக போராட்டங்கள் எல்லாம் நீங்கி என் குடும்பம் இன்று சமாதானமாக வாழ கர்த்தர் உதவி செய்துள்ளார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். Dr. **ஆனந்த ஸ்திரா** மற்றும் அவர்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

திரு. காளிதாஸ், திருவாரூர்.




# வெளிநாட்டில் வேலை கிடைத்தது!

கடந்த வருடம் வேலையின் நிமித்தமாக நான் அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு திரும்பும்படியான சூழ்நிலை உருவாகியது. அதனால் பல சங்கடங்களுக்கு உள்ளானேன், சென்னையில் வேலை பார்த்து வந்தேன். நான் மீண்டும் USA போக வேண்டும் என மிகவும் விரும்பினேன். ஆகவே திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை நேரில் சந்தித்து என்னுடைய விருப்பத்தை தெரிவித்து, எனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். **சகோதரர் பாரத்துடன் ஜெபித்து, தீர்க்கதரிசனமாக கூறியபடி எனக்கு மீண்டும் அமெரிக்காவில் வேலை கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தர் செய்த நன்மையை மறவாமல் அன்பரின் ஊழியத்திற்கும், S.J.Saves Trust அறப்பணிகளுக்கும் தொடர்ந்து உதவி செய்துக் கொண்டிருக்கிறேன்.**

திரு. ஆனந்த தேவதாசன், சென்னை.

# கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவை அன்பு என்னை கொடிய பாவத்திலிருந்து விடுதலையாக்கியது!

நான் சிறுவயதிலிருந்தே ஒழுங்காக பள்ளிக்கு செல்ல மாட்டேன். தீய நண்பர்களுடன் சேர்ந்து பீடி, சிகரெட், கஞ்சா போன்ற பழக்கத்திற்கு உள்ளானேன். துன்மார்க்கமான வாழ்க்கையில்தான் தொடர்ந்து வாழ்ந்துக்கொண்டிருந்தேன். இதனால் பயங்கரமான பிசாசு எனக்குள் இருந்துக்கொண்டு என்னை கொன்றுவிடுவேன் என பயமுறுத்தியது. இந்த சூழ்நிலையில் அன்பரின் ஊழியத்தின் மூலம் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு என் நண்பர் ஒருவர் அழைத்து வந்தார். சகோதரர் மேடையிலிருந்து ஜெபத்தை ஆரம்பித்தவுடனே நான் பயங்கரமாக ஆடினேன். சகோதரர் என்னைப்பார்த்து இயேசுவின் இரத்தம் ஜெயம் என சொல்லி, இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் அந்த பிசாசை கடிந்துக்கொண்டபோது அது என்னைவிட்டு வெளியே போய்விட்டது. கர்த்தர் தாமே என்னை அற்புதமாக விடுதலையாக்கினார். அன்றிலிருந்து நான் தெளிந்த புத்தியுள்ளவனாய் வாழ்ந்துக்கொண்டிருக்கிறேன். கடந்த வருடம் சகோதரரை சந்தித்து வேலைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். **சகோதரர் ஜெபித்துவிட்டு 1000 ரூபாயை என் கையில் கொடுத்து என்னை ஆசீர்வதித்து அனுப்பினார். தற்பொழுது எனக்கு வேலை கிடைத்து தினமும் 1000 ரூபாய் சம்பாதித்து வருகிறேன். தேவ பக்தியுள்ள பெண் கிடைத்து திருமணமும் நடைபெற்றது. தேவனுக்கே மகிமை! எனக்காக பாரத்துடன் ஜெபித்து உதவிய சகோதரருக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.** மாதந்தோறும் எனது தசம பாக காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு செலுத்தி வருகிறேன்.

திரு. சேகர், அரியலூர்.



### அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி வாயிலாக சகோதரர் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் தீர்க்கதரிசனமாய் ஜெபிக்கும்பொழுது சர்வவல்லமையுள்ள தேவன் செய்த மிகப் பெரிய அற்புதம்!



# பல வருடமாக பார்வை இழந்த கண்கள் இயேசுவால் மீண்டும் பார்வை பெற்றது!

என் பெயர் எலிசா. நான் விஜயவாடாவிலிருந்து 550 கி.மீ. தள்ளி கடப்பாவில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் வசித்து வருகிறேன். சிறு வயதிலிருந்தே நான் இயேசுவை அதிகமாய் நேசித்து அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு இருந்தேன். நான் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என விரும்பினாலும் அது ஒருபோதும் நடைமுறைக்கு முடியாத காரியமாய் இருந்தது. ஏனென்றால் என்னுடைய இரண்டு கண்களால் எதையும் சரியாக பார்க்க முடியாது. பல சமயங்களில் என் எதிரில் இருப்பவர்களே எனக்கு தெரியாது. இதனால் வேலைக்கும் போக முடியவில்லை.

ஒரு போதகரிடம் சென்று “நான் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும்” என்னை ஊழியத்தில் பயன்படுத்துங்கள் என்று கேட்டேன். இதுபோல பலரிடமும் தொடர்ந்து கேட்டு இருக்கிறேன். அவர்கள் எல்லாருமே உனக்கு கண் தெரியாத படியால், உன்னால் ஒன்றும் செய்ய முடியாது, எந்த வேலைக்கு போகவோ, திருமணம் செய்யவோ, ஊழியம் செய்யவோ உன்னால் முடியாது என்று கூறி என்னை மிகவும் சோர்வடையச்செய்தனர். இதனால் அடிக்கடி நான் தனியே உட்கார்ந்து சோர்ந்துபோய் அழுது கொண்டிருப்பேன். மருத்துவர்களும் என்னை கைவிட்டு விட்டனர்.

இந்நிலையில் ஒரு நாள் இரவு நேரத்தில் நான் தூங்கிக்கொண்டு இருந்தப்பொழுது ஒரு தேவ மனிதர் எனக்கு முன் நிற்பதை பார்த்தேன், அவர் அருகில் இயேசு கிறிஸ்துவும் நின்றுக்கொண்டிருந்தார். இயேசு என்னை நோக்கி, “என் அருகில் நிற்கும் இந்த தேவமனிதர் எனது தீர்க்கதரிசி, நீ குணமடையும்படியும், உன்னுடைய நல்ல எதிர்காலத்திற்காகவும் தீர்க்கதரிசனமாய் ஜெபிப்பார்! அப்பொழுது உன் வாழ்க்கை முற்றிலும் மாறிவிடும், புது வாழ்வு மலரும், நீ கண்டிப்பாய் எனக்கு ஊழியம் செய்வாய்” என்று கூறினார். இந்த தரிசனத்தை என் சொப்பனத்தில் இரண்டு முறை கண்டேன். அதன்பின் இந்த தேவதாசரை எங்கு காண முடியும் என தேடித் தேடி அலைமோதினேன்.

ஒருநாள் சுபவார்த்தா தொலைக்காட்சியில் நான் பார்த்த அதே தேவ மனிதர் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் தேவசெய்தி கொடுத்து தீர்க்கதரிசனமாய் பலருக்காக ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். இடையில் திடிரென்று எனது பெயரை சொல்லி “எலிசா! நீ எவ்வளவேனும் கலங்காதே! உனக்கு சிறு வயதிலிருந்து கண் பார்வை

சரியாக தெரியாது, இருப்பினும் உலகின் ஒளியான இயேசு கிறிஸ்து இப்பொழுது உனக்கு பரிபூரண சுகத்தை கொடுத்து உனக்கு தெளிவான கண் பார்வையை தருகிறார், உனக்கு நல்ல தேவ பக்தியுள்ள மனைவி வாழ்க்கை துணையாக கிடைப்பாள், குழந்தைகள் பிறக்கும் நீ தொடர்ந்து கர்த்தருக்கு ஊழியம் செய்வாய்" என்று தீர்க்கதரிசனமாய் கூறினார்கள். அந்த நொடிப்பொழுதில் என் மீது தேவனுடைய ஒளிபட்டது. நான் முற்றிலும் சுகமானேன். என் கண்களால் நன்றாக பார்க்க முடிந்தது.

சகோதரர் சொன்னபடியே, கிறிஸ்துவை அறியாத ஒரு குடும்பத்திலிருந்து இயேசுவை ஏற்றுக்கொண்டு, பல எதிர்ப்புகளின் மத்தியிலும் கர்த்தருக்காக வைராக்கியமாக வாழ்ந்த தேவ பக்தியுள்ள ஒரு பெண்ணை தேவன் எனக்கு மனைவியாக கொடுத்தார். அவள் ஒரு நர்சிங் ஆபிஸர் மற்றும் RMP முடித்த டாக்டர். அவள் பெயர் தொற்காள். கர்த்தர் எங்களுக்கு இரண்டு மகன்களை கொடுத்தார். ஒரு மகன் பெயர் ஜான், இன்னொரு மகனின் பெயர் ஜாய் ஜாஸ்பர் ஆகம். தற்பொழுது ஒரு நல்ல வேதாகம புத்தக சாலை வைத்து நடத்திக் கொண்டு இருக்கிறேன். அதிகமான பேர் என்னுடைய புத்தக சாலைக்கு வந்து ஜெபித்து புத்தகங்களை வாங்கி நன்மை அடைகிறார்கள். என்னை தூஷித்த, பரிகசித்த அனைவருக்கும் முன்பாக கர்த்தர் இயேசு தமது உண்மையான தீர்க்கதரிசி மூலம் எனக்கு ஒரு புது வாழ்க்கையை தந்துள்ளார். இந்த அற்புதத்தை என்னால் மறக்கவே முடியாது. என்றைக்காவது ஒரு நாள் அவருடைய ஊழியத்திற்கு ஏதாவது ஒரு காரியத்தை ஸ்பான்ஸர் செய்ய வேண்டும் என்று அதிகமாக விரும்பினேன். அதின்படி சுமார் 15 கூட்டங்களில் நான் கலந்துகொண்டு அன்பரின் ஊழியத்தை தொடர்ந்து தாங்கி வருகிறேன். ஒவ்வொரு முறையும் 550 கி.மீ. முதல் 800 கி.மீ. தூரம் வரை பயணம் செய்து வந்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்கிறேன். உண்மையாகவே இயேசு இன்றும் ஜீவிக்கிறார்! அதற்கு எங்கள் குடும்பமே மிகப்பெரிய சாட்சி. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**திரு.எலிசா, கடப்பா**


# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும்**

**காலை 9.30 மணி – 11.30 மணி**

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ அனல்மூட்டும் தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.



டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.




# S.J.SAVES TRUST

# நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

*கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்.*
*(சங்கீதம் 72:12)*

## அன்பான தேவ பிள்ளைகளே!

கடந்த மாதங்களில் சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி தென்காசி மற்றும் தாமிரபரணி ஆறு ஓடும் கரையோரங்களிலும் பயங்கரமான கனத்த மழையும், காற்றும் வந்து மிகப்பெரிய சேதத்தை ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இத்தகைய இயற்கை சேதங்கள் இந்த கடைசி காலங்களில் அதிகமாக ஏற்படுவதை நாம் அனைவரும் அறிவோம். ஒரே நாளில் ஒரு சில இடங்களில் 199 செ.மீ. வரைக்கும் மழை பெய்துள்ளது. சற்று யோசித்து பாருங்கள். ஒரே நாளில் இவ்வளவு பயங்கரமான மழை பெய்தால் யார் தப்ப முடியும்?

தூத்துக்குடியில் பெரிய பெரிய கம்பெனி முதற்கொண்டு மக்களுடைய குடியிருப்புகள் வரை பயங்கரமான மழை பெய்து, மக்களுடைய அத்தியாவசிய பொருட்கள், ஆடு, மாடுகள் அனைத்தும் மழை வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போனது அதிக கவலையை ஏற்படுத்தியது.

நமது அன்பு சகோதர, சகோதரிகள் உணவின்றி ஐந்து நாள் வரை பட்டினியாகவும், அநேகர் தண்ணீரிலேயும் இருந்திருக்கிறார்கள். பெருத்த சேதம் சென்னையிலும், தென் தமிழ்நாட்டிலும் நடைபெற்றதை நாம் அறிவோம். எனவே இப்படிப்பட்ட எதிர்பாராத ஆபத்துகளினால் சிக்கி தவித்த மக்களுக்கு நாம் நிச்சயமாய் உதவி செய்ய வேண்டும்.

நமது **S J Saves Trust** மூலமாக தூத்துக்குடி சோரிஸ்புரம் பகுதியில் உள்ள 100 குடும்பத்தினருக்கு பெட்ஷீட், பாய், 18 வகையான அத்தியாவசிய சமையல் பொருட்கள் மற்றும் அரிசி வழங்கப்பட்டது. தேவை கடல் அளவு, நாம் செய்தது கடலில் ஒரு தூசி அளவு தான். இதற்காக தன்னந்தனியாக உதவி செய்த நமது அருமை பங்காளர் **திரு.மாத்யூஸ்** அவர்களுக்கு நாம் நன்றி கூறுவோம்.

தொடர்ந்து இப்படிப்பட்ட உயிர் சேதங்களும், ஏனைய சேதங்களும் ஏற்படாத வண்ணம் ஊக்கமாய் ஜெபிப்போம். தேவைகள் இன்னும் அதிகம் உண்டு. உங்களுக்கு விருப்பம் இருந்தால் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்கள் சார்பில் அந்த உதவிகளை நாம் கஷ்டப்படுகிற மக்களுக்கு துரிதமாய் செய்வோம்.

இப்பணிக்கு உள்ளூரில் எங்களுக்கு உதவி செய்த அன்பு சகோதரர்கள் திரு.அந்தோணி, திரு.பாலா அவர்களுக்கு எங்கள் நன்றி தெரிவிக்கிறோம்.

**தொடர்ந்து நாம் இப்படிப்பட்ட அறப்பணிகளில் முன்னேறி செல்வோம்.**

# S.J. SAVES TRUST

**மூலமாக தூத்துக்குடி சோரிஸ்புரம் பகுதியில் உள்ள 100 குடும்பத்தினருக்கு பெட்ஷீட், பாய், 18 வகையான அத்தியாவசிய சமையல் பொருட்கள் மற்றும் அரிசி வழங்கப்பட்டது.**










BAJAJ
Plast

Flood

# S.J.S.T
# கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**தயாளகுணமுள்ளவன் தயாளமானவைகளை யோசிக்கிறான், தயாளமானவைகளிலே நிலைத்தும் இருக்கிறான்.(ஏசாயா 32:8)**
கர்த்தரின் பெரிதான கிருபையினாலும் அன்பரின் ஊழிய பங்காளர்கள் தயாள மனதுடன் செய்கிற உதவியினாலும் நமது மருத்துவமனை நன்கு வளர்ந்து வருகிறது.

மருத்துவமனைச் சுற்றிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. கிராமத்திலுள்ள மக்கள் இதனால் பெரிதும் பயன் அடைகின்றனர். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

தொடர்ந்து மருத்துவமனைக் குறித்து கர்த்தர் வைத்திருக்கிற திட்டம் நிறைவேறவும், தேவைகள் சந்திப்படவும் ஜெபியுங்கள். இன்னும் ஏராளமான நோயாளிகள் வந்து பயன்பெறவும், மருத்துவமனையில் பணி செய்கிற அனைவருக்காகவும் ஜெபியுங்கள்.

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். **யோபு 42:10–ன்படி நீங்களும் ஒரு வேளை நோய் என்ற சிறையிருப்பினால் துன்புற்றாலும் நம்மைச்சுற்றி துன்புறுகிற நோயாளிகளை நினைவுகூர்ந்து மருத்துவமனை பணிக்கு உதவி செய்யுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார். மாதந்தோறும் 6 இலட்சங்கள் வரை செலவு செய்கிறோம்.**
**இந்த பணிக்கு உதவி செய்கிற ஒவ்வொரு பங்காளர்களையும் கர்த்தர் தாமே ஆசீர்வதித்து அவர்களுக்கு வேண்டிய நன்மைகளை கர்த்தர் தாராளமாய் அருளுவாராக!**

**ஏழை எளியவர்களுக்கும், கைவிடப்பட்ட பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும், ஆதரவற்ற வயதானவர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும், மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவி செய்ய**

Bank A/c. Name : S J SAVES TRUST
Account No. 019150310875369
Bank Name : Tamilnadu Mercantile Bank
Branch : Palakarai, Trichy
IFSC Code : TMBL 0000019
A/c Type : Current

**மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய**

Bank A/c. Name : S J SAVES TRUST
Account No. 36477148891
Bank Name : State Bank of India
Branch : Cantonment, Trichy  Main Brach
IFSC Code : SBIN 0000930
A/c Type : Current

# சிம்போரோசா (SYMPHOROSA)

## விசுவாசம் ஆழமானது

சிம்போரோசா ஒரு விசுவாசத் தாய். கிறிஸ்துவுக்காக பக்தி வைராக்கியம் கொண்டவர். தன் புதல்வர்கள் ஏழு பேரையும் அவ்விதமாகவே வளர்த்தவர். எத்தனை இடர்பாடுகள் வந்தபோதும் இத்தாயை எவராலும் அசைக்க முடியவில்லை. ஏனெனில் கடலின் ஆழத்தைக் காட்டிலும் இவர்களின் விசுவாசம் ஆழமானது. மலைகள் பெயர்ந்து போனாலும் இவர்கள் விசுவாசத்தை பெயர்க்க முடியாது.

## ரோம பேரரசனின் கொடுங்கோல் ஆட்சி

ஹேட்ரியன் **(Hadrian)** என்ற பேரரசன் ரோமாபுரியை ஆண்டு வந்தான். கிறிஸ்தவர்களை கண்டால் இவனுக்கு பிடிக்காது. அவர்களை சித்ரவதை செய்து, கொடுமைப்படுத்துவது இவனது பொழுதுபோக்கு.

ரோமர்களின் கடவுளான ஜூபிடரை வணங்க வேண்டும் என்ற கட்டளை நாடெங்கும் பரவியது. கிறிஸ்தவர்களில் பலர் தங்கள் விசுவாசத்தில் நிலைத்து நின்று, அச்சிலையை வணங்க மறுத்தனர். அவ்விதமாக எதிர்த்து நின்ற கிறிஸ்தவர்கள் பிடிக்கப்பட்டு சிங்கங்களின் கூண்டுகளிலும், சிறையிலும் போடப்பட்டனர். பலர் வாளுக்கு இரையாயினர்.

## கிறிஸ்துவுக்காக மரித்த தாயும் 7 புதல்வர்களும்

சிம்போரோசா என்ற தாய் தன் புதல்வர் ஏழு பேருடன் பிடிக்கப்பட்டார். ஜூபிடரை வணங்கும்படி கட்டாயப்படுத்தினர். இந்த தாய் மற்றும் ஏழு புதல்வர்களும் "கிறிஸ்துவை மட்டுமே நாங்கள் வணங்குவோம்" என கூறி உறுதியாக இருந்தனர். அதற்காக சவுக்கால் அடிக்கப்பட்டனர். முதலில் இத்தாயாரின் நீண்ட கூந்தலை மரக்கிளையில் கட்டி தொங்கவிட்டனர். ஒரு பெரிய பாறைக்கல் அவரது கழுத்தில் கட்டப்பட்டது. இறுதியில் அவரை ஆற்றில் தள்ளி மூழ்கடித்துக் கொன்றனர். இவரது ஏழு மகன்களும் கத்தியால் குத்தப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும், ரம்பத்தால் அறுக்கப்பட்டும் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர்.

தங்கள் உயிரை இழக்க நேரிட்டும், கிறிஸ்து தங்களுக்கு தந்த புத்துயிரால், திடமனம் கொண்டு தங்கள் விசுவாசத்தில் நிலைத்து நின்று, கிறிஸ்து ஒருவரையே வணங்குவோம் என்று, தங்கள் வாழ்க்கையின் மூலம் அவர்களுக்கு போதனை செய்தனர்.

கிறிஸ்துவுக்காக பல பாடுகள் அனுபவித்து, தங்கள் உயிரையும் கொடுத்த இவர்களின் தியாகம் பெரியது. புதிய ஆண்டிற்குள் பிரவேசித்துள்ள நாமும் இறுதிவரை நம் விசுவாசத்தைக் காத்துக்கொள்வோம்!

---

**நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். 2தீமோ.4:7**

---


**கிறிஸ்துவுக்காக பாடுபட்டு மரிக்கிறவர்களின் பிள்ளைகளுக்கு ஒரு ஸ்தாபனம் தேவை. அதற்காகவும் ஜெபியுங்கள். இந்தப் பணிக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள். 94889 32937**

# உலக செய்திகள்

## பெற்றோர்கள் கவனத்திற்கு...

**உங்கள் பிள்ளைகள் இண்டர்நெட்டைப் பயன்படுத்தும்போது, கீழ்க்கண்ட விஷயங்களை உறுதி செய்யுங்கள்.**

- தனியறையில் அமர்ந்து கம்ப்யூட்டரைப் பயன்படுத்த அனுமதிக்காதீர்கள். ஹாலிலோ அல்லது உங்கள் பார்வையில் படுகிற இடத்திலோ கம்ப்யூட்டர் இருக்கட்டும்.
- குறிப்பாக இரவு நேரத்தில் தனியாக அவர்களை கம்ப்யூட்டர் முன்பு உட்காரவிடாதீர்கள். பிள்ளைகளுக்கு அந்தந்த வயதில் தேவையான, பயன்படக்கூடிய சாஃப்ட்வேரை மட்டுமே கம்ப்யூட்டரில் இன்ஸ்டால் செய்து வையுங்கள். முடிந்தவரை கேம்ஸ் விளையாட பழக்கப்படுத்தாதீர்கள்.



- சில இணையத்தளங்கள் ஏதாவது படிவங்களை ஆன்லைனில் கொடுத்து நிரப்பச் சொல்லும். உங்கள் கண்காணிப்பும் அனுமதியும் இல்லாமல் இதுபோன்ற படிவங்களில் எதையும் நிரப்பக்கூடாது என்பதையும், இப்படிக் கேட்கும் இளையதளத்திலிருந்து உடனே வெளியில் வந்துவிட வேண்டும் என்பதையும் சொல்லி வையுங்கள்.
- இணையம் பற்றியும் பாதுகாப்பு வழிகள் பற்றியும் உங்கள் குழந்தைகளிடம் மனம்விட்டுப் பேசுங்கள். கனிணி பற்றி அவர்களுக்கு என்ன தெரியும் என்பதைக் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். அவர்களுடன் அமர்ந்து இணையத்தில் சிறிது நேரம் செலவிடுங்கள். பல பிள்ளைகள் தடம் மாறுவதற்கு, சரியான அரவணைப்பு இல்லாததே காரணம்.
- உங்கள் பிள்ளைகள் பார்வையிடும் இணையதளங்களைக் கண்காணியுங்கள். நீங்கள் செல்லும்போது அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த இணையதளத்தை மூடினால், உடனே கவனிக்கவும்.
- அறிமுகம் இல்லாத நபர்கள் இணையத்தில் பழக்கமாகி நேரில் சந்திக்க அழைத்தால் கண்டிப்பாக மறுத்துவிட வேண்டும் என்பதை அவர்களுக்கு பாலபாடமாக சொல்லிக் கொடுங்கள்.
- பெண்பிள்ளைகள் தங்கள் புகைப்படங்களை இணையத்தில் பகிர்வதைத் தவிர்க்க வேண்டும். தற்போதுள்ள தொழில்நுட்பங்கள் மூலம் அந்தப் புகைப்படங்களை ஆபாசமாக மாற்றலாம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- இணையப் பயன்பாட்டின்போது பிள்ளைகள் தவறே செய்திருந்தாலும், கண்டிப்போடு புரிய வையுங்கள். பிள்ளைகள் கம்ப்யூட்டரைப் பயன்படுத்திய பிறகு, அவர்கள் எந்தெந்த பகுதிக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதை ஹிஸ்டரி ஆப்ஷனுக்குள் சென்று அவ்வப்போது பாருங்கள். இதில் தவறு ஏதுமில்லை.
- இணையக் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் உண்டு என்ற விஷயம் பலருக்குத் தெரிவதில்லை. ஒரு பெண்ணுக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் மெயில் மூலமோ, சமூக இணையதளம் மூலமோ செய்யப்படும் குற்றத்துக்கு ஒரு வருடம் வரை சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டுமே வழங்கப்படும். ஒரு பெண்ணின் நடத்தை பற்றிய பொய் வதந்தியைப் பரப்பினால் இரண்டு வருட சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டுமே வழங்கப்படலாம்.

# Founder's Day

**09** MARCH




**SPECIAL PRAYER FOR MINISTRY AND PARTNERS**

நம் சகோதரர் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுடைய பிறந்த நாள் மார்ச் 13-ம் தேதியாகும். இந்த நாளை ஒவ்வொரு வருடமும் அன்பு தேவ பிள்ளைகள் மற்றும் அன்பரின் ஊழிய பங்காளர்களுடன் இணைந்து **Founder's Day** ஆக சிறப்பித்து வருகிறோம்.

கடந்த ஆண்டில் நம் சகோதரர் மிகவும் பெலவீனப்பட்டு இருந்தபோதிலும் சுவிசேஷ பணியை உற்சாகமாய் செய்ய கர்த்தர் தாமே உதவி செய்தார். அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம்.

இந்த புதிய ஆண்டில் சகோதரருக்காக ஜெபிக்கவும், அன்பரின் ஊழிய பங்காளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சகோதரரின் பிறந்த நாளை சிறப்பிக்கவும் அன்புடன் அழைக்கிறோம்.

மார்ச் 13–ம் தேதி புதன் கிழமை அன்று வேலைநாட்களாக இருக்கிறபடியால் அந்த நாளில் அநேகர் கூடுவதில் சிரமம் ஏற்படலாம். எனவே, இந்த ஆண்டு **மார்ச் 9–ம் தேதி சனிக்கிழமை** அன்று சகோதரரின் பிறந்த நாளை சிறப்பிக்க இருக்கிறோம்.

**மார்ச்** 10–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை விடுதலையின் திருச்சபையில் விசேஷித்த ஆராதனையும் நடை பெறும். இந்தியாவின் எந்த பகுதியிலிருந்தாலும் இந்த சிறப்பு நாட்களில் நீங்கள் கலந்துகொள்ளலாம்.

உங்கள் வருகையை முன்கூட்டியே 9488845627, 8098742638 என்ற அலைபேசி எண்ணிற்கு தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அந்நாளில் கர்த்தர் உங்களுக்கு அளிக்கும் வாக்குத்தத்தத்தோடும், ஊழியத்தின் தேவைகளுக்கான ஸ்தோத்திர காணிக்கைகளை கொடுத்தும் மகிழலாம். சிறப்பு விருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள் – ரோமர் 16:16**

**பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள், அந்நியரை உபசரிக்க நாடுங்கள் – ரோமர் 12:13**

---

## விசேஷித்த ஜெபக் கூடுகை

**2024 மார்ச் 9 சனிக்கிழமை** | **9:30 AM TO 1:30 PM**

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் 10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி — 18

## தென்காசி மாவட்டம்
கரிவலம்வந்தநல்லூரில்

# அற்புதத்தின் மாலை

03 பிப்ரவரி (சனிக்கிழமை)

**Time: 5.00PM To 9.00PM**

கவிபரணி மஹால்
இராஜபாளையம் ரோடு, கரிவலம்வந்தநல்லூர்,
தென்காசி மாவட்டம்.

தேவ செய்தியாளர்



Dr. ஆனந்த ஸ்திரா

## திருநெல்வேலியில்

குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் பங்காளர் சந்திப்பு

04 பிப்ரவரி (ஞாயிற்றுக்கிழமை)

**Time: 3.00PM To 7.00PM**

செல்வி திருமண மஹால்
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.

## நாகர்கோவிலில்

அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

10 பிப்ரவரி (சனிக்கிழமை)

**Time: 9.30AM To 2.00PM**

விஜயதா திருமண மண்டபம்
WCC ரோடு, நாகர்கோவில்

தேவ செய்தியாளர்கள்



Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

**குண்டூர், விஜயவாடா ஆகிய இடங்களில் பிப்ரவரி 17,18 நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள்.**

திருச்சியில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

24 பிப்ரவரி சனிக்கிழமை



9:30 AM to 2:00 PM

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10–வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி–18

தேவ செய்தியாளர்கள்

Dr.ஆனந்த ஸ்திரா
மற்றும் குடும்பத்தினர்

தொடர்புக்கு : 0431 – 2741922 & 94888 45627

(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)